BE THE CURE
FOR INDIAN CHILDREN WITH BLOOD CANCER, THALASSEMIA AND OTHER BLOOD DISORDERS

# ஜீவன் ஸ்டெம் செல் வங்கி

(ஜீவன் ரத்த வங்கி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பிரிவு)

22/11, வீட்க்ராஃப்ட் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600034.

செல்பேசி : 97908 97918 / 89399 99214 இமெயில் : stemcell@jeevan.org இணையதளம் : www.bethecure.in

Safety First

## கர்ப்பிணி தாய்மார்களுக்கு தொப்புள்கொடி ரத்த தானம் குறித்த தகவல்கள்

உலகம் முழுவதும் ஸ்டெம் செல்கள் குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கர்ப்பிணிகள் பிரசவித்தவுடன் காலம் காலமாக குப்பையில் எறியப்பட்டு வந்த தொப்புள்கொடி ரத்தத்தில் மருத்துவத்துக்குப் பயன்படக்கூடிய ஸ்டெம் செல்கள் இருப்பது 20 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்டது. இவ்வாறு ஸ்டெம் செல்கள் கண்டுபிடிக்கப்பட்டது முதல், ரத்தப் புற்று நோய், தலசீமியா, ரத்தம் தொடர்பான நோய்களை குணப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்கும், 40 கிலோ எடை குறைவானவர்களுக்கும் மிக அதிக அளவில் நோய்களை குணப்படுத்த ஸ்டெம் செல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஸ்டெம் செல்கள் பயன்படுவதற்கு அதன் சாதக அம்சங்களே காரணம்.

சாதக அம்சங்கள்:

- தொப்புள் கொடியிலிருந்து ஸ்டெம் செல்களைப் பிரித்தவுடன் மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியும்.
- சேகரித்த ஸ்டெம் செல்களின் ஆயுள் காலம் 24 ஆண்டுகள்.
- பக்க விளைவுகள், ஸ்டெம் செல்களை நோயாளியின் உடல் நிராகரித்தல், நோய் எதிர்ப்பு குறைதல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் குறைவு.

### தொப்புள் கொடி ரத்த வங்கியின் அவசியம் என்ன?

ஸ்டெம் செல்களை உள்ளடக்கிய தொப்புள் கொடி ரத்தத்தை ஒரு குழந்தை நோயாளிக்கோ அல்லது இளம் வயது நோயாளிக்கோ செலுத்துவதற்கு முன்பு கொடையாளிக்கும் நோயாளிக்கும் இடையே எச்எல்ஏ (HLA) என்று அழைக்கப்படும் ரத்த செல் புரத பொருத்தம் இருப்பது மிகவும் அவசியமாகும். இதனால் தான் ஸ்டெம் செல்கள் மூலம் குணப்படுத்தக்கூடிய ரத்தம் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அதன் குடும்ப உறுப்பினர்களிடமிருந்தே தொப்புள் கொடி ரத்த தானம் பெறப்படுகிறது. ஆனால் 30 சதவீத குழந்தை நோயாளிகளுக்கு மட்டுமே குடும்பத்தில் எச்எல்ஏ பொருத்தம் சரியாக அமையும் நிலை இப்போது உள்ளது. சிகிச்சை தேவைப்படும் மீதமுள்ள 70 சதவீத குழந்தைகளுக்கு குடும்பத்துக்கு வெளியே இருந்துதான் தொப்புள் கொடி ரத்தத்தை பெற்று எச்எல்ஏ பொருத்தத்தைச் சரி பார்த்து சிகிச்சை அளிக்க முடிகிறது.

ஆனால், HLA பொருத்தம் என்பது இனத்தைச் சார்ந்ததாகும். பாதிக்கப்படும் இந்திய குழந்தைகளில் 10 சதவீதம் பேருக்கு மட்டும் வெளிநாடுகளைச் சேர்ந்தோரின் HLA வகை ரத்த செல் பொருந்தும். அப்படியே அதிர்ஷ்டவசமாக பொருந்தினாலும் இறக்குமதி செய்து சிகிச்சை அளிக்க ரூ.20 லட்சத்துக்கு மேல் செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஆண்டுதோறும் 20 கோடி குழந்தைகள் பிறக்கின்றன. இதே அளவுக்கு ஸ்டெம் செல்களை உள்ளடக்கிய தொப்புள் கொடிகள் வீணடிக்கப்படுகின்றன. ஜீவன் ஸ்டெம் செல் வங்கி போன்ற பொது தொப்புள் கொடி ரத்த தான வங்கிகள் மூலம், தொப்புள் கொடி ரத்தம் சேமிக்கப்படும் நிலையில் எந்தவித செலவும் இன்றி 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளின் சிகிச்சைக்கு ஸ்டெம் செல்களைப் பன்படுத்த முடியும். தொப்புள் கொடி ரத்தத்திலிருந்து ஸ்டெம் செல்களைப் பிரித்தெடுக்கும் கட்டணத்தை அளிக்க முடியாத நிலையில் உள்ள ஏழை நோயாளிகளுக்கு இது மிகவும் பலன் அளிக்கும்.

### தானம் அளிக்க நடைமுறைகள் என்ன?

பிரசவத்தின் போது உங்கள் தொப்புள் கொடி ரத்தத்தை தானமாக அளிப்பதற்கு சில நடைமுறைகள் உள்ளன. அதாவது, உங்கள் குடும்ப மருத்துவ வரலாறு குறித்து விரிவான கேள்வி - பதில் அடங்கிய படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்து தர வேண்டும். உங்களது தற்போது, கடந்த கால வாழ்க்கை முறை மற்றும் தாம்பத்ய உறவு, நீங்கள் சாப்பிடும் மருந்துகள், ரத்த தானம் செய்வோரிடம் வழக்கமாக கேட்கப்படுபவை ஆகியவை குறித்த கேள்விகள் அந்தப் படிவத்தில் இடம் பெற்றிருக்கும்.

ஜீவன் ஸ்டெம் செல் வங்கியும் உங்கள் நலன் கருதி பிரசவம் தொடர்பான உங்களது மற்றும் உங்களது குழந்தையின் மருத்துவ வரலாறை முழுமையாக ஆய்வு செய்யும். தாங்கள் அளித்த தகவல்கள் அனைத்தும் ரகசியம் காக்கப்படுவதோடு, தாங்கள் தானமாக அளித்த தொப்புள் கொடி எதிர்காலத்தில் மாற்று சிகிச்சைக்கு உதவுமா என்று தீர்மானிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

## தொப்புள் கொடி ரத்தம் சேகரிக்கப்படுவது எப்படி?

குழந்தையை கர்ப்பிணி பிரசவித்தவுடன், தொப்புள் கொடியை வெட்டி எடுத்து அந்த இடத்தை இறுகக் கட்டிவிட்டு, ரத்தம் மிகுந்த பாதுகாப்புடன் சேகரிக்கப்படும். இவ்வாறு ரத்தம் சேகரிப்பதில் தாய்க்கோ அல்லது குழந்தைக்கோ எந்தவித ஆபத்தும் இல்லை. தொப்புள் கொடியை சுத்தம் செய்துவிட்டு, தொப்பிள்கொடியின் சிரையில் ஒரு ஊசியைச் செலுத்தி மருத்துவ ரீதியாக கிருமிநீக்கம் செய்யப்பட்ட பையில் தொப்புள் கொடி ரத்தம் சேகரிக்கப்படும்.

இவ்வாறு தொப்புள் கொடி ரத்தம் சேகரிக்கப்பட்ட பை சீலிடப்பட்டு உரிய தகவல் விவரங்களுடன் ஜீவன் ஸ்டெம் செல் வங்கிக்கு சோதனை மற்றும் வேதியியல் செயல்பாட்டுக்காக அனுப்பி வைக்கப்படும்.

ஒருசில காரணங்களால் தொப்புள் கொடியிலிருந்து சேகரிக்கப்பட்ட ரத்தம், ஸ்டெம் செல் வங்கியில் சேமித்து வைக்க முடியாத நிலையில் இருந்தால் உடனடியாக அது நிராகரிக்கப்பட்டு தர நிர்ணயச் சோதனைக்கு உட்படுத்தப்படும். இவ்வாறு நிராகரிக்கப்படும் ரத்தம் மருத்துவ ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப்படும். எனினும் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படும் தொப்புள் கொடி ரத்தத்தில், தாய் அல்லது குழந்தை என யாரின் விவரமும் இடம் பெறாது. இதனால் ஆராய்ச்சியாளர்களுக்கு நிராகரிக்கப்பட்ட ரத்தம் குறித்த எந்த விவரமும் தெரிய வாய்ப்பில்லை.

## ரத்தப் பரிசோதனை

குழந்தையை பிரசவித்த தாயிடமிருந்து சிறிதளவு ரத்தம் பரிசோதனைக்காக சேகரிக்கப்படும். மரபணு நிலைகள், எச்ஐவி - மஞ்சள் காமாலை வைரஸ் ஆகியவை குறித்து அறிய பிரசவித்த தாயின் ரத்தம், பிறந்த குழந்தையின் தொப்புள் கொடி ரத்தம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

## இதர தகவல்கள்

பொது தொப்புள் கொடி ரத்த வங்கி சேமிப்பு முறைக்கு நீங்கள் உதவுவதால் செலவு எதுவும் கிடையாது.

தொப்புள் கொடி ரத்தத்தை தானமாக கொடுப்பதால் உங்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. எனினும் கர்ப்ப காலத்திலேயே தானம் பெறும் தகுதியில் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டால் அது குறித்த கர்ப்பிணிக்கு உரிய முறையில் தெரிவிக்கப்பட்டு தானம் தவிர்க்கப்படும். அத்தகைய நிலையில் தொடர் மருத்துவப் பரிசோதனைக்கு கர்ப்பிணி உட்படுத்தப்பட்டு அவரது நலமும் கருக் குழந்தையின் நலமும் காக்கப்படும். தொப்புள் கொடி ரத்தத்தை தானமாகக் கொடுப்பவர் - தானமாகப் பெறுபவரின் விவரங்கள் ரகசியம் காக்கப்படும்.

தொப்புள் கொடி ரத்தத்தை தேவைப்படும் நோயாளிகளுக்கு செலுத்தும் மாற்று சிகிச்சை மையங்களுக்கு உங்கள் குழந்தையின் தொப்புள் கொடி ரத்தம் குறித்த தகவல்கள் மட்டுமே அளிக்கப்படும். ஆனால், உங்களது தனிப்பட்ட விவரங்கள் எதுவும் அளிக்கப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

தொப்புள் கொடி ரத்த தானம் தொடர்பாக மேலும் விளக்கங்கள் பெற 97908 97918 அல்லது 89399 99214 என்ற செல்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். விளக்கங்கள் பெற இ-மெயில் முகவரி stemcell@jeevan.org இணையதளம் www.bethecure.in

BE THE CURE
FOR INDIAN CHILDREN WITH BLOOD CANCER, THALASSEMIA AND OTHER BLOOD DISORDERS

**Jeevan Stem Cell Bank**

*(Unit of Jeevan Blood Bank and Research Centre)*

*Safety First*

22/11, Wheatcrofts Road, Nungambakkam, Chennai 600 034

Mobile : 97908 97918 / 89399 99214 • Email : stemcell@jeevan.org • Website: www.bethecure.in